## மெட்ரோ ரெயிலில்

# இன்றும் இலவசமாக பயணிக்கலாம்

சென்னை, பிப்.12–

சென்னை வண்ணாரப்பேட்டை–டி.எம்.எஸ். இடையே புதிய மெட்ரோ ரெயில் சேவையை கடந்த 10–ந் தேதி திருப்பூரில் இருந்து பிரதமர் நரேந்திரமோடி தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் அனைத்து வழித்தடங்களிலும் பொதுமக்கள் மெட்ரோ ரெயிலில் இலவசமாக பயணிக்கலாம் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித்தது.

இந்தநிலையில், இன்றும் (செவ்வாய்க்கிழமை) மெட்ரோ ரெயிலில் பொதுமக்கள் இலவசமாக பயணிக்கலாம் என்று மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.